முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1080

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.09.2022, செவ்வாய்கிழமை

1. தர்ம சக்திமிகு அரங்கனே
   தவசியாய் வாழும் தேசிகனே
   பெருமைமிக்க தர்மம் தனை செய்து
   பேருலகத்தைக் காக்கும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆவணி மாதம் 28 நாள், 13.09.2022 செவ்வாய்கிழமை)
   வரமென அரங்கன் தர்மத்தின் மூலம்தான்
   வையகமே மாற்றம் தனை அடையக்கூடும்
3. தருகின்ற அரங்கன் தயவின் மூலமாகத்தான்
   தரணியில் உலகோர்க்கு ஞானசித்தி உறுதியாகி
   ஆகியே அன்பர்களெல்லாம் அரங்கன் வழி வந்து
   அழியாமை பெற்ற ஞானிகளாக மாறக்கூடும்
4. கூடவே இந்த பேரற்புதத்தை
   குரு அரங்கனை கொண்டு ஆறுமுகன் யான் நடத்த
   நாடெங்கிலும் உள்ள அன்பர்கள்
   நல்கிவந்து ஓங்காரக்குடிலில் தொடர்பு கூட்டி
5. கூட்டியே அரங்கன் திருவடி பற்றி
   குருவே என சரணடைந்தால் போதும்
   தட்டாது உலகோர்க்கு ஞான சித்தி
   தவமாக தர்மமாக அரங்கன் வடிவில் கீர்த்தியாகி
6. ஆகியே உலகோர் ஞானம் பெறுவர்
   ஆறுமுகன் என் காட்சி கண்டு உலகில் அழியாமை பெறுவர்
   வரமென அரங்கனுக்கு நித்தம்
   வல்லமை யான் ஊட்டி வருகின்றேன்
7. திறம்பட அரங்கன் தொடர்பில் இருக்கும்
   தொண்டர்கள் அனைவருக்கும்
   என் காட்சியும் ஆசியும் உறுதி உறுதி
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–